பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 02 2025 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசவுள்ளார்.

2. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதலாவது அமர்வு இன்றுடன் நிறைவடைகிறது.

3. தமிழகத்தில் விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து சாதிக்க விளையாட்டு மேம்பாட்டுத்துறை உறுதுணையாக இருக்கும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கிராமப்புற மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. பொன்முடி கூறியுள்ளார்.

5. இங்கிலாந்துக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 142 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

*<<<<>>>>*

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஃபிரான்ஸ் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்காவின் வாஷிங்டன் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு அமெரிக்க அரசு சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் இந்திய வம்சாவளியினரும் உற்சாகமாக கலந்துகொண்டனர்.

தமது இரண்டு நாள் அமெரிக்கப் பயணம் குறித்து சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, திரு. டொனால்ட் ட்ரம்ப்புடன் இந்தியா – அமெரிக்கா இடையேயான இருதரப்பு பேச்சுகளை நடத்த ஆவலுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

மக்களின் நலனுக்காகவும், உலகின் சிறந்த எதிர்காலத்திற்காகவும் இருநாடுகளும் இணைந்து செயல்படும் என்று திரு. மோடி குறிப்பிட்டுள்ளார்.

*<<<<>>>>*

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதலாவது அமர்வு இன்றுடன் நிறைவடைகிறது.

புதிய வருமான வரி சட்ட மசோதா, வக்ஃப் சட்டதிருத்த மசோதா ஆகியவை இன்று தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது பகுதி அடுத்த மாதம் 10ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

ரயில்வே துறையில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் நிலையில் இதுகுறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இத்தேர்வுகளுக்காக இலவச பயிற்சி அளிக்கப்படுவதாகவும், மாணவர்கள் இதில் பங்கேற்று பயன்பெறுமாறும் மாவட்ட வேலைவாய்ப்பு துணை இயக்குநர் திரு. மணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து சாதிக்க விளையாட்டு மேம்பாட்டுத்துறை உறுதுணையாக இருக்கும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்காக மாநில அளவில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி மற்றும் கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அவர் பரிசு வழங்கி பேசினார்.

சிறுவர்களின் தனித்தன்மையைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சிறுவர்கள், மாணவர்களின் நலனுக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளில் ஒட்டுமொத்தமாக வெற்றி பெற்ற தட்டப்பாறை மண்டலத்திற்கு கோப்பைகளை வழங்கினார்.

அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற சிறுவர்களுக்கும் பதக்கம் அணிவித்து சான்றிதழ்களை திரு. உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கிராமப்புற மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. பொன்முடி கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற அவர், 210 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றினார்.

கிராமப்புற மாணவர்கள் கல்லூரிப் படிப்பை நிறைவு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அரசு அமல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

எனவே இதனைப் பயன்படுத்தி போட்டித் தேர்விலும் மாணவர்கள் பங்கேற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று திரு. பொன்முடி அறிவுறுத்தினார்.

<<<<>>>>

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

வானொலி மூலம் தகவல்களை அறிந்துகொள்வதையும், அதன் முக்கியத்துவம் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரசார் பாரதி தலைவர் திரு. **Navneet Kumar Sehgal** வெளியிட்டுள்ள செய்தியில், செய்திகள் மற்றும் தகவல்களை ஒலிபரப்புவதன் மூலம் நாட்டின் கலாச்சார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வானொலி முக்கியப் பங்கு வகிப்பதாக கூறியுள்ளார்.

ஆகாஷ்வானி தலைமை இயக்குநர் திரு. **Pragya Paliwal Gaur** வெளியிட்டுள்ள செய்தியில், சுமார் 90 ஆண்டுகளாக ஆகாஷ்வாணி மக்களுக்கு தகவல்கள், கல்வி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பள்ளி, கல்லூரி மாணவர்கள் தங்களுக்கு தேவையான உதவி, பாதுகாப்பு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக ‘போலீஸ் அக்கா’ திட்டம் தருமபுரி மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் இதற்கான செயலியை பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறும், மற்றவர்களிடம் இதை பகிர்ந்துகொள்ளுமாறும் தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. ஆர். சதீஷ் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைனுக்கு எதிரான போரை நிறுத்துவது தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினுடனும், யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடனும் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் விவாதித்துள்ளார்.

-----------

அமெரிக்காவின் புதிய தேசிய புலனாய்வுப் பிரிவு இயக்குநராக திரு. **Tulsi Gabbard** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

-----------

தில்லியில் கஷ்மீர் இளைஞர்களுடன் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவு குறித்து மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் உரையாடினார்.

-----------

நாட்டில் சுமார் 150 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.

-----------

காசி தமிழ்ச் சங்கமத்தின் ஒரு பகுதியாக அகஸ்தியர் மற்றும் சித்த மருத்துவம் குறித்த ஒருநாள் கருத்தரங்கு தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

-----------

திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பிலான அதிநவீன உபகரணங்கள் சேவையை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

-----------

திருப்பத்தூர் மாவட்டம் மூக்கனூர் பகுதியில் 73 பயனாளிகளுக்கு 14 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி வழங்கினார்.

-----------

ராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர்கள் குறைதீர்ப்புக் கூட்டம் நாளை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------

கடற்படையில் உள்ள பணி வாய்ப்புகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடற்படையின் சார்பில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்லூரியில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம் ரயில் நிலையம் அருகே ரயிலில் இருந்து தள்ளிவிடப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணுக்கு அரசு அறிவித்த 3 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகைக்கான காசோலையை ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி வழங்கினார்.

-----------

பி.எஸ்.என்.எல். சார்பாக ஆயிரத்து 864 பிரத்யேக மொபைல் எண்களை பெறுவதற்கான ஏலம் நடைபெற்று வருவதாக பி.எஸ்.என்.எல் சென்னை மண்டலம் அறிவித்துள்ளது.

-----------

*__விளையாட்டுச் செய்திகள்__*

இங்கிலாந்துக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 142 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 356 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

ஷுப்மன் கில் 112 ரன்னும், ஷ்ரேயாஸ் அய்யர் 78 ரன்னும், விராட் கோலி 52 ரன்னும் எடுத்தனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர் ஆதில் ரஷீத் 4 விக்கெட் வீழ்த்தினார்.

357 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 34 புள்ளி 2 ஓவரில் 214 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய பந்துவீச்சாளர்கள் அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ரானா, அக்சர் பட்டேல், ஹர்திக் பாண்ட்யா ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினார்கள்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் இந்தியா அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது.

-------------

பஹ்ரைனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய்சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 6-4, 7-6 என்ற செட் கணக்கில் சாகேத் மைனேனி - **Sinclair** இணையை வென்றது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் கோவா அணி 3-1 என்ற கோல் கணக்கில் மும்பை அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி — ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**